## பொன் வித்யாஷ்ரம் பள்ளி - வளசரவாக்கம் 2017-18

## ஒன்பதாம் வகுப்பு - தமிழ் இரண்டாம் மொழி

## முதல் பருவத் தேர்வு பயிற்சித் தாள்

### I. இலக்கணப் பகுதி: நிரப்புக

1. தமிழ் இலக்கணம் ____________ வகைப்படும்

   அ. 4 ஆ. 5 இ 6 ஈ. 7

2. சார் பெழுத்துகள் ________வகைப்படிம்

   அ. 5 ஆ. 3 இ. 8 ஈ. 10

3. பொருள் கோள் ______________ வகைப்படும்.

   அ. 5 ஆ. 8 இ . 10 ஈ. 16

4. ஆகுபெயர் மொத்தம் ______________ வகைப்படும்.

   அ. ஒன்று ஆ. 8 இ. பதினாறு ஈ பதினெட்டு

5. அளபெடை __________வகைப்படும்.

   அ. 3 ஆ 2 இ. 4 ஈ. 6

6. உயிரள பெடை _______வகைப்படும்.

   அ. 3 ஆ. 5 இ. 7 ஈ. 6

7. அளவை ஆகுபெயர்கள் மொத்தம் _______________

   அ. 5 ஆ. 7. இ. 4 ஈ. 8

8. வல்லின் எழுத்துகளின் இடப் பிறப்பு ____________

   அ. கழுத்து, ஆ. மார்பு இ. தலை ஈ. மூக்கு.

9. மெல்லின எழுத்க்துகளின் இடப்பிறப்பு ________

   அ. மாப்பு ஆ. மூக்கு இ. கழுத்து. ஈ. தலை

10. ஆய்த எழுத்தின் பிறப்பிடம் _______________

    அ. தலை ஆ. சொலிசை இ. இடுப்பு ஈ. வாய்திறப்பதால்

11. “உ றா அர்க் குறுநோய் உரைப்பாய் “ இத்தொடரில் ___________ அளபெடை இடம் பெற்றுள்ளது.

### II. கூறியவாறு செய்க:

1. தழீ (வினையெச்சச் சொல்லாக மாற்றுக)

   அ. தழுவி ஆ. தழுவுதல் இ. தழிஇ ஈ. தழீஇ

2. உண்ணா நின்றான் (இடை நிலையை எடுத்து எழுதுக)

   அ. கிறு ஆ. கின்று இ. ஆநின்று ஈ. ஆ

3. படித்தான் (தொழிற் பெயராக்குக)

அ.படி ஆ. பாடி இ. படித்தல் ஈ. படித்தனன்

4. கெடு (தொழிற் பெயராக்குக)
   அ. கெடுதல் ஆ.கேடு இ. கெ ஈ. கோ
5. அளபு (பொருள் தருக)
   அ. மாத்திரை ஆ. சொல் இ. தொடர் ஈ. பதம்
6. அண்ணம் (பொருள் தருக)
   அ.கீழ்வாய்ப்பகுதி ஆ. மேல்வாய்ப்பகுதி இ. இதழ் ஈ. மேற்கதுவாய்.
7. மதுரையான் (பகுபத வகை கூறுக)
   அ.பொருள் ஆ. இடம் இ. காலம் ஈ. சினை
8. செய்தான் (இடைநிலை கூறுக.)
   அ. இன் ஆ. த் இ. ட் ஈ. ஆன்
9. இறந்தகால இடைநிலையில் அமைந்த சொல்
   அ.உண்பான் ஆ. உண்டான் இ. உண்கிறான் ஈ. உண்டிலன்
10. உண்பான் (இடைநிலை கூறுக)
   அ. ண் ஆ. ப் இ. ஆன் ஈ. உண்

## III. சரியான சொற்றொடரைத் தேர்வு செய்க:

1. அ. ஏவல் வினையாக அமைவது பெயர்ப்பகுபதபதம்
   ஆ. ஏவல் வினையாக அமைவது வினைப் பகுபதம்
   இ. ஏவல் வினையாக அமைவது உரிப் பகுபதம்
   ஈ. ஏவல் வினையாக அமைவது இடைப் பகுபதம்

.

2. அ. கண்ணன் என்பது பெயர்ப் பகுபதம்
   ஆ. கண்ணன் என்பது இடைப் பகுபதம்.
   இ. கண்ணன் என்பது சினைப் பகுபதம்
   ஈ. கண்ணன் என்பது உரிப் பகுபதம்.

3. அ. இடைச் சொற்கள் பகுபதங்கள் ஆகும்
   ஆ. இடைச் சொற்கள் பகாப் பதங்கள் ஆகும்
   இ. இடைச் சொற்கள் பதங்கள் ஆகும்.
   ஈ. இடைச் சொற்கள் இரண்டு ஆகும்.

4. அ. ‘ஐந்து லிட்டர் கொடு’ என்பது நீட்டலளவை ஆகும்.
ஆ. ‘ஐந்து லிட்டர் கொடு’ என்பது முகத்தல் அளவையாகும்.
இ. ‘ஐந்து லிட்டர் கொடு’ என்பது எண்ணல் அளவை.
ஈ. ;’ஐந்து லிட்டர் கொடு’ என்பது என்பது எடுத்தல் அளவை ஆகும்.

5. அ. ப், ம் நா விளிப்பு தொடுதலால் பிறக்கிறது.
ஆ. ப்,ம், மேலுதடும் கீழுதடும் பொருந்த பிறக்கும்.
இ. ப்,ம், நா நு னி பொருந்த பிறக்கும்.
ஈ. ப், ம் அண்ணம் தொட பிறக்கும்.

6. அ.ஒற்றளபெடையின் மாத்திரை இரண்டு
ஆ. ஒற்றளபெடையின் மாத்திரை ஒன்று
இ. ஒற்றளபெடையின் மாத்திரை முன்று
ஈ.ஒற்றளபெடையின் மாத்திரை ஒன்று

7. அ. ஒரடிக்குள் சொற்களை மாற்றியயைத்துப் பொருள் கொள்வது மொழிமாற்று.
ஆ. ஒரடிக்குள் சொற்களை மாற்றியமைத்துப் பொருள் கொள்வது அடிமறிமாற்று.
இ. ஒரடிக்குள் சொற்களை மாற்றியமைத்துப் பொருள் கொள்வது ஆற்று நீர்ப் பொருள் கோள்.
ஈ. ஒரடிக்குள் சொற்களை மாற்றியமைத்துப் பொருள் கொள்வது நிரல் நிறை.

8. அ. ல்,அல்,ஆ என்பது எதிர்கால இடைநிலை.
ஆ. ல்,அல்,ஆ என்பது நிகழ்கால இடை நிலை
இ. ல்,அல்,ஆ என்பது எதிர்மறை இடைநிலை
ஈ. ல்,அல்,ஆ என்பது இடைநிலைக்குரியது.

9. அ. சித்திரையான் என்பது இடப்பெயர்.
ஆ. சித்திரையான் என்பது காலப்பெயர்
இ. சித்திரையான் என்பது தொழிற்பெயர்
ஈ. சித்திரையான் என்பது பொருட்பெயர்.

## IV. **கட்டுரை:**

1. முன்னுரை - ஒழுக்கம் என்பதன் பொருள் - ஒழுக்கமின்மையால் வரும் தீங்கு - மாணவப் பருவத்தில் ஒழுக்கம் - வள்ளுவர் கருத்து - முடிவுரை.
2. முன்னுரை - தீவிரவாதம் என்பது - தீவிரவாதம் மனித குலத்திற்கு கேடு - சமுதாயம் ஒரு காரணம் - தீவிரவாத்தை ஒழிக்க விழி - முடிவுரை.
3. முன்னுரை - நட்பின் சிறப்பு - நல்ல நட்பு தரும் முடிவற்ற இன்பம் - தீய அல்லது கூடா நட்பின் வழி வரும் துன்பம் - நல்ல வழியில் செலுத்துவதே நல்ல நட்பு - முடிவுரை.

## V. **கடிதம்:**

1. உமது பகுதியில் தெரு நாய்த் தொல்லை குறித்து மாநகராட்சி ஆணையருக்கு ஒரு கடிதம் வரைக.
2. உனது சகோதரியின் திருமணத்திற்கு வரும் படி அழைத்து, அயலூரில் வாழும் உனது தோழன்/தோழிக்குக் கடிதம் எழுதுக.
3. நீ வாழும் பகுதியில் சாலையில் கழிவு நீர் த்ங்குவதால் கொசுக்கள் உருவாகிக் கொடிய நோய்கள் பரவுவதை எடுத்துக்கட்டி சுகாதாரத் துறை அமைச்சருக்குக் கடிதம் ஒன்று எழுதுக.

## VI. **துணைப்பாடம் : ( கட்டுரை வடிவில் எழுதுக)**

1. மாமரம்
2. கண்ணதாசன் கவியின்பம்

## VII. திருக்குறள் : ( நிரப்புக)

1. ________________________ நோற்பார் பெரியர் _______________________ இன்னாச்சொல் நோற்பாரின் பின்.

2. திறனல்ல __________________ செய்யினும் நோ நொந்து ______________________செய்யாமை நன்று.
3. ஒறுத்தாரை ____________வையாரே ________________________பொறுத்தாரைப் பொன்போற் பொத்ந்து.

4. ______________________இறப்பினை என்றும் அதனை மறத்தல் ________ நன்று.

5. மிகுதியான் __________ செய்தாரைத் தாம்தம் _________________ வென்று விடல்.

**VIII. சுருக்கி வரைதல்:**

இரஷ்ய நாட்டில் புகழ் பெற்ற எழுத்தாளர் ஒருவர் இருந்தார். அவ்வப்போது உடிவுத்தொழிலையும் செய்து வந்தார். ஒருமுறை தொடர்வண்டி நிலையத்தில் அவர் நின்றிருந்தபோது. அங்கிருந்த பெண்மணி ஒருவர் அவரைக் கையைத் தட்டி அழைத்தார். அவரின் தோற்றம் ஒரு கூலிக்காரர் போல் இருந்தோ என்னவோ?

"ஐயா! தொடர் வண்டி புறப்படும் நேரமாகிவிட்டது! என் கணவர் அருகிலுள்ள சிற்றுண்டி விடுதியில் இருக்கிறார். அவரை இங்கு அழைத்து வாருங்கள்! நீங்கள் செய்கின்ற இந்த உதவிக்குக் கூலி பெற்றுக் கொள்ளுங்கள் ". என்று அடையாளங்களைக் கூறினார்.

அவரும் ஒப்புக் கொண்டு அப்பெண்மணியின் கணவரை உடனடியாக அழைத்து வந்தார். அவர் செய்த வேலைக்கான கூலியாக ஒரு சிறு தொகையினைப் பெற்றுக் கொண்டார்.

சிறிது நேரங்க் கழித்த மின்னர் தான் அப்பெண்மணிக்கு அவர் தாம் இரஷ்ய நாட்டின் புகழ் பெற்ற எழுத்தாளர் லியோ டால்ஸ்டாய் என்பது தெரிய வந்தது.

தான் செய்த தவற்றை உணர்ந்து அவரிடம் மன்னிப்புக் கேட்டார் அப்பெண்மணி. ஆனால் டால்ஸ்டாயோ, "அதனால் என்ன, நீங்கள் சொன்ன வேலையை நான் கூலிக்குத்தான் செய்தேன். அதனால் செய்த வேலைக்காகப் பெற்றுக் கொண்ட கூலியைத் திருப்பித் தர மாட்டேன்', என்றார் புகழ் பெற்றவராயினும் உழைப்பின் அருமையை அவர் அறிந்திருந்தார்.

உழைத்து உண்ணும் உணவே சுவைக்கும். உழைக்காமல் உண்பது பிறர் உழைப்பைச் சுரண்டுவதற்கு ஒப்பாகும். எந்த வயதினராக ( இயலாதோர் தவிர ) இருப்பினும் ' உழைத்தே உண்ணுதல் வேண்டும்'. அப்பொழுதுதான் அந்த வீடும் நாடும் முன்னேறும்.

********************************